நம்மூரு மார்க்கெட்

கோயம்பேடு மார்க்கெட் காய்கறிகள், பழங்கள், பூக்கள் இன்றைய விலை நிலவரம் (1 கிலோவுக்கு)

காய்கறிகள்

பீன்ஸ்	ரூ.50	முருங்கைக்காய்	ரூ.20	உருளைக்கிழங்கு	ரூ.14
பீட்ரூட்	ரூ.20	இஞ்சி	ரூ.90	முள்ளங்கி	ரூ.15
பாகற்காய்	ரூ.40	பச்சை மிளகாய்	ரூ.40	கோவைக்காய்	ரூ.30
சுரைக்காய்	ரூ.10	அவரைக்காய்	ரூ.40	புடலங்காய்	ரூ.15
கத்தரிக்காய்	ரூ.10	நூக்கல்	ரூ.30	நாட்டு தக்காளி	ரூ.25
முட்டை கோஸ்	ரூ.10	வெண்டைக்காய்	ரூ.20	நவீன் தக்காளி	ரூ.38
கேரட்	ரூ.25	பெரிய வெங்காயம்	ரூ.25	கருணைக்கிழங்கு	ரூ.25
சவ் சவ்	ரூ.15	சாம்பார் வெங்காயம்	ரூ.50	பூண்டு	ரூ.170

பழங்கள்

ஆப்பிள்	ரூ.150	செவ்வாழை	ரூ.80
சாத்துக்குடி	ரூ.60	நேந்திரம்	ரூ.65
ஆரஞ்சு	ரூ.80	டிராகன் (ஒன்று)	ரூ.55
மாதுளை	ரூ.120	அன்னாசி	ரூ.60
கொய்யா	ரூ.65	கிர்ணி	ரூ.30
கற்பூரவள்ளி	ரூ.70	தர்பூசணி	ரூ.20
ஏலக்கி	ரூ.70	பன்னீர் திராட்சை	ரூ.85

பூக்கள்

சாமந்தி	ரூ.80
மல்லி	ரூ.450
ஜாதிமல்லி	ரூ.300
முல்லை	ரூ.240
ரோஜா	ரூ.140
சம்பங்கி	ரூ.70
மரிக்கொழுந்து (கட்டு)	ரூ.5

கடந்த 10 மாதங்களில் 21,655 பேருக்கு டெங்கு பாதிப்பு

நிறுவனங்களில் மழைநீர் தேங்கினால் ரூ.10 ஆயிரம் அபராதம்

சுகாதாரத் துறை அமைச்சர் அருண்ராஜ் எச்சரிக்கை

சென்னை

பெரு நிறுவனங்கள் தங்களது வளாகத்தை அதிகளவு மழைநீர் தேங்கும் வகையில் அலட்சியமாக வைத்திருந்தால், ரூ.10 ஆயிரம் அபராதம் விதிக்கப்படும் என சுகாதாரத்துறை அமைச்சர் அருண்ராஜ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

சென்னை மாநகராட்சி சார்பில் வடபழனி, கெங்கையம்மன் கோயில் தெருவில் காய்ச்சல் தடுப்பு சிறப்பு மருத்துவ முகாம் நேற்று நடைபெற்றது. இந்த முகாமை சுகாதாரத்துறை அமைச்சர் அருண்ராஜ் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்பகுதியில் உள்ள வீடுகளுக்கு சென்று டெங்கு தடுப்பு நடவடிக்கைகளையும் பார்வையிட்டு, பொதுமக்களுக்கு விழிப்புணர்வு துண்டுப்பிரசுரங்களை வழங்கினார். பின்னர், அவர் கூறியதாவது:

டெங்கு தடுப்பு நடவடிக்கையின் முக்கிய பகுதியாக கொசுப் புழு உற்பத்தியாகும் இடங்களை அழிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பும் கண்டிப்பாக அவசியம்.

அனைவரும் தங்கள் வீட்டுக்குள்ளும், வீட்டைச் சுற்றிலும், குறிப்பாக மொட்டை மாடியிலும் சென்று பாருங்கள். தேவையற்ற பாத்திரங்கள், சிறிய தொட்டிகள், மூடி, ஆட்டுக்கல், பயன்படுத்தாத பூந்தொட்டிகள் என எதுவாக இருந்தாலும், மழைநீர் தேங்கக் கூடிய வாய்ப்புள்ளவற்றை அப்புறப்படுத்துங்கள்.

பெரிய நிறுவனங்கள், கட்டுமான நிறுவனங்கள் மற்றும் பெரு நிறுவன அமைப்புகள் தங்கள் வளாகங்களை மழைநீர் தேங்கும் வகையில் அலட்சியமாக வைத்திருந்தால் உடனடியாக ரூ.10 ஆயிரம் அபராதம் விதிக்கப்படும். மீண்டும் அது தொடர்ந்தால் கூடுதல் அபராதம் விதிக்கப்படும்.

சென்னை மாநகராட்சி சார்பில் கடந்த 2 மாதங்களில் மட்டும் ரூ.7.50 லட்சம் வரை அபராதம் வசூலிக்கப்பட்டுள்ளது. பலமுறை எச்சரித்தும் நடவடிக்கை எடுக்காத வீடுகளுக்கும் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் கடந்த ஜன. 1 முதல் அக்.7-ம் தேதி வரை 21,655 பேருக்கு டெங்கு பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. இதுவரை 10 பேர் உயிரிழந்துள்ளனர். தற்போது 301 பேர் டெங்கு பாதிப்பால் உள்நோயாளிகளாக சிகிச்சையில் உள்ளனர். சென்னையில் கொசு ஒழிப்புப் பணிகளுக்காக சென்னை மாநகராட்சியில் மட்டும் 3,700 கொசு ஒழிப்புப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு அவர் கூறினார்.

இந்த ஆய்வின்போது, மாநகராட்சி ஆணையர் ஜி.எஸ். சமீரன், துணை ஆணையர் (சுகாதாரம்) தாக்கரே சுபம் ஞானதேவ் ராவ், மத்திய வட்டார துணை ஆணையர் எச்.ஆர்.கவுஷிக், பொது சுகாதாரம், நோய்த் தடுப்பு மருந்துத்துறை கூடுதல் இயக்குநர் சம்பத் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தாய்மாமன் சீர், அண்ணன் சீர்வரிசை என

பெண்களை 50 ஆண்டு பின்னோக்கி இழுத்துச் செல்கிறது தவெக அரசு

திமுக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கண்டனம்

சென்னை

தாய்மாமன் சீர், அண்ணனின் சீர்வரிசை என தவெக அரசு பெண்களை மீண்டும் 50 ஆண்டுகள் பின்னோக்கி பழமைவாதத்துக்கு இழுத்துச் செல்லப் பார்க்கிறது என திமுக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி குற்றம்சாட்டினார்.

இதுகுறித்து சென்னையில் நடந்த கிழக்கு மாவட்ட திமுக மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணி முப்பெரும் விழா பொதுக்கூட்டத்தில் அவர் பேசியதாவது:

பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்யத் தவறிய ஆட்சியாக தவெக ஆட்சி உள்ளது. பெண்கள் யாரையும் எதிர்பார்த்து நிற்காமல் சொத்துரிமை, கல்வி, வருமானம் பெற்று சுயமரியாதையுடன் சொந்தக் காலில் தலைநிமிர்ந்து வாழ வேண்டும் என்பதே திமுகவின் கொள்கை. ஆனால், தற்போதைய அரசு தாய்மாமன் சீர், அண்ணனின் சீர்வரிசை என்ற பெயரில் பெண்களை மீண்டும் 50 ஆண்டுகள் பின்னோக்கி, பழமைவாதத்திற்கு இழுத்துச் செல்லப் பார்க்கிறது.

மருத்துவமனைகளில் போதிய மருத்துவர்களும், குழந்தைகளுக்குத் தேவையான மருந்துகளும் இல்லாத நிலையில், நூற்றுக்கணக்கான கோடி ரூபாயைச் செலவிட்டு ஒரு கிராம் தங்க மோதிரம் வழங்கும் விளம்பர அரசியலை செய்கிறார்கள்.

நாடு முழுவதும் ஜிஎஸ்டி வருவாய் 14.7 சதவீதம் உயர்ந்துள்ள நிலையில், தமிழகத்தில் மட்டும் 5 சதவீதம் குறைந்துள்ளது. இது மாநிலத்தின் நிதி நெருக்கடியையும் பொருளாதாரச் சரிவையுமே காட்டுகிறது.

இவ்வாறு அவர் பேசினார்.

ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் 3 பதக்கம் வென்ற

தடகள வீராங்கனை, பயிற்சியாளருக்கு வேலம்மாள் நெக்ஸஸ் சார்பில் பாராட்டு விழா

சென்னை

ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் 3 பதக்கங்களை வென்ற தடகள வீராங்கனை வித்யா ராம்ராஜ், அவரது பயிற்சியாளர் நேஹ்பால் சிங் ஆகியோருக்கு வேலம்மாள் நெக்ஸஸ் சார்பில் பாராட்டு விழா நடைபெற்றது.

வீராங்கனை வித்யா ராம்ராஜ், அவரது பயிற்சியாளர் நேஹ்பால் சிங் ஆகியோருக்கு கார் பரிசு வழங்கிய வேலம்மாள் நெக்ஸஸ் தாளாளர் எம்.வி.எம்.வேல்மோகன்.

ஆவடி வேலம்மாள் வித்யாலயா வளாகத்தில் நடைபெற்ற விழாவுக்கு வேலம்மாள் நெக்ஸஸ் நிறுவனத்தின் தாளாளர் எம்விஎம் வேல்மோகன் தலைமை வகித்து, வித்யா ராம்ராஜ், நேஹ்பால் சிங்கை கவுரவித்தார். இருவருக்கும் வேலம்மாள் நெக்ஸஸ் சார்பில் கார் பரிசாக வழங்கினார்.

விழாவில் தாளாளர் வேல்மோகன் பேசுகையில், “சர்வதேச அளவில் இந்தியாவுக்கு பெருமை சேர்த்த இவர்களின் அர்ப்பணிப்பு, கடின உழைப்பு மற்றும் விளையாட்டுத் திறமையைப் பாராட்டும் வகையில் இவ்விழா ஏற்பாடு செய்யப்பட்டது. இளம் தலைமுறையினர் விடாமுயற்சி, தன்னம்பிக்கை, ஒழுக்கம், அர்ப்பணிப்புடன் செயல்பட்டால் உலக அளவில் சாதிக்க முடியும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தும் வகையில் வித்யா ராம்ராஜின் சாதனை, அமைந்துள்ளது. அவரது சாதனை, விளையாட்டுத் துறையில் ஆர்வமுள்ள ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கு மிகப்பெரிய ஊக்கமாக விளங்குகிறது. எதிர்காலத்தில் அவர்கள் மேலும் பல உயரங்களைத் தொட வாழ்த்துகிறோம்.

வேலம்மாள் நெக்ஸஸ், கல்வியுடன் விளையாட்டுத் திறமைகளையும் ஊக்குவித்து, மாணவர்கள் தங்களின் தனித்திறமைகளை வெளிப்படுத்துவதற்கான சிறந்த வாய்ப்புகளையும், பயிற்சி வசதிகளையும் வழங்கி வருகிறது” என்றார்.

முன்னதாக வித்யா ராம்ராஜ், அவரது தாயார் மற்றும் பயிற்சியாளர் நேஹ்பால் சிங் ஆகியோரை அலங்கரிக்கப்பட்ட சாரட் வண்டியில் மாணவர்கள் ஊர்வலமாக அழைத்து வந்து உற்சாக வரவேற்பு அளித்தனர்.

மாணவர்களுக்காக எம்எல்ஏ சார்பில் ஜெராக்ஸ் இயந்திரம்

சோழிங்கநல்லூர்

சோழிங்கநல்லூர் தொகுதி எம்எல்ஏ ஈசிஆர் சரவணன் தனது அலுவலகத்தில், ரூ.1.30 லட்சம் மதிப்பில் வாங்கிய புதிய ஜெராக்ஸ் இயந்திரத்தை ரிப்பன் வெட்டி திறந்துவைத்து மாணவர்களின் பயன்பாட்டுக்கு கொண்டு வந்தார்.

சோழிங்கநல்லூர் எம்எல்ஏ அலுவலகம் அருகே உள்ள அரசு மேல்நிலைப் பள்ளி மாணவர்களின் கல்வி தேவைக்காக இந்த இயந்திரம் அமைக்கப்பட்டுள்ளது. தினமும் காலை 10 மணிமுதல் மாலை 7 மணிவரை இலவசமாக மாணவர்கள் இதில் நகல் எடுத்துக்கொள்ளலாம்.

அருகில் உள்ள இ-சேவை மையத்துக்கு வரும் பொதுமக்களும் இந்த இலவச ஜெராக்ஸ் வசதியை பயன்படுத்திக்கொள்ளலாம் என்று ஈசிஆர் சரவணன் எம்எல்ஏ தெரிவித்தார்.

இளம் விஞ்ஞானி தயாரித்த ‘ரூமி ட்வின் மிஷன்’

ஒரே நேரத்தில் 2 ராக்கெட்கள் நாளை விண்ணில் ஏவப்படுகின்றன

கேளம்பாக்கம்

தனியார் ராக்கெட் தயாரிப்பு மையத்தில் தயாரிக்கப்பட்ட 2 ராக்கெட்கள் ஒரே நேரத்தில் நாளை (அக்.10) விண்ணில் ஏவப்பட உள்ளன. ‘ரூமி ட்வின் மிஷன்’ எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த திட்டத்தின் கீழ் ‘ரூமி 1’, ‘ரூமி 2’ என பெயரிடப்பட்டுள்ள 2 ராக்கெட்டுகள் மாமல்லபுரம் அருகே திருவிடந்தையில் இருந்து ஏவப்படுகின்றன.

‘ஸ்பேஸ் ஜோன்’ என்ற ராக்கெட் தயாரிப்பு மையத்தை கேளம்பாக்கம் அடுத்த தையூரில் இளம் விஞ்ஞானி ஆனந்த் மேகலிங்கம் நடத்தி வருகிறார். கடந்த ஆண்டு பல்வேறு கட்ட ஆராய்ச்சிகளுக்குப் பிறகு இந்த மையம் சார்பில் முதல் ராக்கெட் ஏவப்பட்டு வெற்றிகரமாக சோதிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து, ஒரே நேரத்தில் 2 ராக்கெட்டுகளை விண்ணில் ஏவும் திட்டத்துக்கான ஆய்வுகள் கடந்த 2 ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்டன. சந்திரயான் திட்ட இயக்குநராக இருந்த மயில்சாமி அண்ணாதுரையின் ஆலோசனையின் அடிப்படையில் இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படுகிறது.

இரு ராக்கெட்டுகளும் 100 சதவீதம் உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட ஹைபிரிட் ராக்கெட் தொழில்நுட்பத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்ச்சியில் தமிழக ஆளுநர் ஆர்.வி.அர்லேகர் உள்ளிட்டோர் பங்கேற்று வாழ்த்த உள்ளனர். மயில்சாமி அண்ணாதுரை, டிஆர்டிஓ விஞ்ஞானி மாணிக்கவாசகம், இலங்கை முன்னாள் அமைச்சர் செந்தில் தொண்டமான் உள்ளிட்டோரும் கலந்து கொள்கின்றனர்.

கேளம்பாக்கத்தைச் சேர்ந்த ஆனந்த் மேகலிங்கம், அங்குள்ள புவனா கிருஷ்ணன் மெட்ரிக் பள்ளியில் பள்ளிப் படிப்பை முடித்தார். பின்னர் தாம்பரம் பாரத் பல்கலைக்கழகத்தில் ராக்கெட் ஆராய்ச்சிப் பிரிவில் உயர்கல்வி பயின்றார். விண்வெளித் துறை ஆர்வத்தின் காரணமாக சுமார் ரூ.4.5 கோடி முதலீட்டில் ‘ஸ்பேஸ் ஜோன்’ மையத்தை தொடங்கி நடத்தி வருகிறார். இம்மையத்தில் 12 ஆராய்ச்சி மற்றும் சோதனைக் கூடங்கள் உள்ளன. 28 இளம் விஞ்ஞானிகள் பணியாற்றி வரும் நிலையில், இதன் மூலம் 75 பேருக்கு வேலை வாய்ப்பு கிடைத்துள்ளதாக ஆனந்த் மேகலிங்கம் தெரிவித்துள்ளார்.

கும்மிடிப்பூண்டி மார்க்கத்தில் சிக்னல் கோளாறால் ரயில் சேவை பாதிப்பு

சென்னை

கும்மிடிப்பூண்டி - சென்னை மார்க்கத்தில், பொன்னேரியில் இருந்து சென்னை சென்ட்ரல் நோக்கி ஒரு மின்சார ரயில் நேற்று காலை சுமார் 8.15 மணிக்கு புறப்பட்டது. இந்த ரயில் திருவொற்றியூர் நிலையத்தை நெருங்கிய போது, திடீரென நடுவழியில் நிறுத்தப்பட்டது. இதுகுறித்து, ரயில்வே அதிகாரியிடம் பயணிகள் விசாரித்தபோது, சிக்னல் கோளாறால் நிறுத்தப்பட்டதாக தெரிவித்தார். இதன்பிறகு, நெடுநேரமாகியும் அந்த ரயில் புறப்படாததால், பயணிகள் பலர் அந்த ரயிலில் இருந்து இறங்கி தண்டவாளத்தை ஒட்டி நடந்து சென்று, திருவொற்றியூர் நிலையத்தை அடைந்தனர்.

இதுபோல, சென்னையில் இருந்து கும்மிடிப்பூண்டி நோக்கி சென்ற மின்சார ரயில்கள், தண்டையார்பேட்டை நிலையம் அருகே நிறுத்தப்பட்டன. பின்னர், அதிகாரிகள், ஊழியர்கள் சிக்னல் கோளாறை சரிசெய்யும் முயற்சியில் ஈடுபட்டனர். காலை 9.40 மணிக்கு சிக்னல் பிரச்சினை சீரானது. இதன்பிறகு, மின்சார ரயில்கள் வழக்கம் போல இயங்கத் தொடங்கின. ரயில் சேவை பாதிக்கப்பட்டதால் பயணிகள் கடும் அவதியடைந்தனர்.

தொலைக்காட்சி பிரபலம் முத்துக்குமரன் மீது பெண் பாலியல் குற்றச்சாட்டு

சென்னை



முத்துக்குமரன்

சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த தொலைக்காட்சி பிரபலம் முத்துக்குமரன் மீது பாலியல் குற்றம்சாட்டி, பெண் ஒருவர் சமூக வலைதளத்தில் வீடியோ வெளியிட்டுள்ளார்.

அதில், அக்.4-ம் தேதி முத்துக்குமரனை சந்தித்ததாகவும், அப்போது அவர் தன்னை வற்புறுத்தி காரில் தனது வீட்டுக்கு அழைத்துச் சென்று பாலியல் தொந்தரவு கொடுத்ததாகவும் வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளார்.

இதுதொடர்பாக முத்துக்குமரன் கூறியதாக வெளியான தகவலில், ‘நானும் சம்பந்தப்பட்ட பெண்ணும் நல்ல நண்பர்கள். அவர் ஏன் இப்படி பேசினார் என்று எனக்கு புரியவில்லை. அவர் கொஞ்சம் மனஅழுத்தத்தில் உள்ளார்’ என்று தெரிவித்துள்ளார். எனினும் இந்த விவகாரம் தொடர்பாக இதுவரை போலீஸில் புகார் அளிக்கப்பட்டதா என்பது தெரியவில்லை.

அரசியல், சமூக அமைப்புகள் தங்களது செய்திகளை எங்களது நாளிதழுக்கு மின்னஞ்சல் வழியாக அனுப்பலாம்.
மின்னஞ்சல் முகவரி: press.release@hindutamil.co.in

தமிழ்நாடு அரசு
நிதித் துறை, சென்னை-9

நாள் : 08.10.2026

செய்தித்தாள் அறிவிப்பு

தமிழ்நாடு அரசு நிதித்துறையின் **04.11.2016** ஆம் நாளிட்ட **319(L)/W&M-II/2016** அறிவிக்கையின் வரையறைகளின் படி வழங்கப்பட்ட **7.39% தமிழ்நாடு மாநில வளர்ச்சிக்கடன் 2026** நிலுவைத் தொகையானது **09.11.2026** அன்று **08.11.2026** ஆம் நாள் உட்பட்ட உரிய நாளது வரையிலான வட்டித் தொகையுடன் திருப்பிச் செலுத்தப்படும் என்று பொதுத் தகவலுக்காக அறிவிக்கப்படுகிறது. யாதொரு மாநில அரசால், 1881 ஆம் ஆண்டு செலாவணி முறிச்சட்டத்தின் கீழ், மேற்சொன்ன நாளினை விடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டிருப்பின், அந்த மாநிலத்தின் தொகை செலுத்தும் அலுவலகங்களால், முந்தைய அலுவலகப் பணி நாளில் திருப்பிச்செலுத்தப்படும். 09.11.2026 ஆம் நாளிலிருந்தும் அதற்கு பின்னரும் இக்கடனுக்கு வட்டித் தொகை சேராது.

2. 2007ஆம் ஆண்டு அரசு கடன் பத்திரங்களின் ஒழுங்குமுறை விதிகளிலுள்ள 24(2) மற்றும் 24(3)ஆம் துணை ஒழுங்குமுறை விதிகளின்படி, பொதுதுணை பேரேட்டு படிவத்தில் அல்லது மூலப் பொது துணைப் பேரேட்டு கணக்கில் அல்லது பங்கு முதல் சான்றிதழில், அரசு கடன் பத்திரங்களை வைத்திருக்கும் பதிவு பெற்ற நபர் ஒருவருக்கு, அவருடைய வங்கி கணக்கில் அல்லது மின்னணு பதிவு மூலம் நிதிகளை வரவு வைக்கும் வசதியுள்ள யாதொரு வங்கியில் கணக்கு வைத்திருக்கும் அவருடைய வரவுக் கணக்கில் உரிய விவரங்களை சேர்த்து, தொகை செலுத்துவதற்கான ஆணை வழங்குவதன் மூலம் முதிர்வுத் தொகை வழங்கப்படும். கடன் பத்திரங்களை பொறுத்தமட்டில், தொகை செலுத்தும் நோக்கத்திற்காக, நேர்விற்கேற்ப அசல் சந்தாதாரர் அல்லது இத்தகைய அரசு கடன் பத்திரங்களை வைத்திருப்பவர் வட்டித்தொகை செலுத்துவதற்காக முகப்பிடப்பட்டுள்ள/பதிவு செய்யப்பட்டுள்ள வங்கிக்கு அல்லது கருவூலத்திற்கு மற்றும் சார் கருவூலத்திற்கு அல்லது பாரத ஸ்டேட் வங்கியின் கிளைக்கு நேர்விற்கேற்ப அவர்களுடைய வங்கிக் கணக்கின் உரிய விவரங்களை அளிக்க வேண்டும்.

3. இருப்பினும், வங்கிக் கணக்கில் உரிய விவரங்கள் இல்லாத/மின்னணு மூலம் நிதிகளை வரவு வைப்பதற்கு ஆணை பிறப்பிக்கப்படாத நேர்வில், உரிய நாளில் தொகையை திருப்பிச் செலுத்துவதற்கு ஏதுவாக **7.39% தமிழ்நாடு மாநில வளர்ச்சிக்கடன், 2026** தொடர்பான கடன் பத்திரங்களை வைத்திருப்பவர்கள், அவர்களுடைய கடன் பத்திரங்களை, 20 நாட்களுக்கு முன்னதாகவே, பொதுக் கடன் அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும். கடன் தொகையை திருப்பிச் செலுத்துவதற்காக கொடுக்கப்படும் கடன் பத்திரங்களின் பின் பக்கத்தில், கீழேகுறிப்பிடப்பட்டுள்ளவாறு உரியமுறையில் எழுதி கையொப்பமிட வேண்டும்.

“சான்றிதழுக்குரிய அசல் தொகை பெறப்பட்டது”

4. பாரத ஸ்டேட் வங்கியின் கிளை ஒன்றில் கருவூலப் பணிகள் மேற்கொள்ளப்படும் இடங்களில், இக்கடன் பத்திரங்கள், பங்கு முதல் சான்றிதழ்கள் வடிவில் இருக்குமாயின், சம்பந்தப்பட்ட வங்கியின் கிளையில்தான் ஒப்படைக்க வேண்டுமே தவிர கருவூலத்திலோ அல்லது சார் கருவூலத்திலோ ஒப்படைக்கக்கூடாது என்பதை குறிப்பாக கருத்தில் கொள்ள வேண்டும்.

5. கடன் தொகை திருப்பிச் செலுத்தக் கோரி, கடன் பத்திரங்கள் முகப்பிடப்பட்டுள்ள இடங்கள் நீங்கலாக பிற இடங்களில் தொகையைப் பெற விரும்புவோர், கடன் பொறுப்பைத் தீர்க்கும் வாசகத்தை அப்பத்திரங்களின் பின்புறம் உரியவாறு எழுதி கையொப்பமிட்டு, சம்மந்தப்பட்ட பொதுக்கடன் அலுவலகத்திற்கு பதிவு அஞ்சல் மற்றும் காப்புறுதி அஞ்சல் மூலம் அனுப்ப வேண்டும். தமிழ்நாடு மாநிலத்தில், அரசு கருவூலகப் பணிகளை மேற்கொள்கின்ற யாதொரு கருவூலம் / சார் கருவூலம் அல்லது பாரத ஸ்டேட் வங்கியின் கிளைகளில் செலுத்தத் தக்க கேட்புக் காசோலை ஒன்றை வழங்குவதன் மூலம், பொதுக் கடன் அலுவலகம், தொகை வழங்கும்.

எம்.ஏ. சித்திக்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்
நிதித் துறை, சென்னை– 09.

செ.ம.தொ.இ./ 867 /வரைகலை/2026

படிவம் A
பொது அறிவிப்பு

(திவால் நிலை மற்றும் திவால்நிலை ஒழுங்குமுறை (பெருநிறுவனதாரர்களின் திவால் தீர்வு செயல்முறைகள்) விதிமுறைகள் 2016-ன் ஒழுங்குமுறைகள் 6-ன்கீழ்)

M/S ரேடார் வென்ச்சர்ஸ் பிரைவேட் லிமிடெட்-க்கு கடன் அளித்தவர்கள் கவனத்திற்கு

வ.எண்.	குறிப்புகள்	விவரங்கள்
1.	பெருநிறுவன கடன்தாரர் பெயர்	**M/s. ரேடார் வென்ச்சர்ஸ் பிரைவேட் லிமிடெட்**
2.	பெருநிறுவனம் இணைக்கப்பட்ட தேதி	03.01.2020
3.	பெருநிறுவன கடன்தாரரை இணைத்த/ பதிவு செய்த அதிகாரப்பூர்வ அதிகாரி	நிறுவனங்கள் பதிவாளர் - சென்னை
4.	பெருநிறுவன அடையாள எண்./ பெருநிறுவன கடன்தாரரின் குறுகிய பொறுப்பு அடையாள எண்.	U63030TN2020PTC133596
5.	பெருநிறுவன கடன்தாரரின் பதிவு அலுவலக முகவரி மற்றும் முதன்மை அலுவலகம் (ஏதேனும் இருந்தால்)	**பதிவு முகவரி & முதன்மை முகவரி:** எண்.56/57, ராஜாஜி சாலை, சென்னை G.P.O., சென்னை, சென்னை, தமிழ்நாடு - 600001. **கூடுதல் வணிக இடங்கள் (GSTIN தேடலின் படி)** 1. சென்னை, தமிழ்நாடு 2. மும்பை, மகாராஷ்டிரா 3. கொல்கத்தா, மேற்கு வங்காளம் 4. பெங்களூரு, கர்நாடகா 5. டெல்லி 6. எர்ணாகுளம், கேரளா 7. ஹைதராபாத், தெலுங்கானா 8. இந்தூர், மத்தியப் பிரதேசம் 9. குருகிராம், ஹரியானா 10. லூதியானா, பஞ்சாப்
6.	பெறுநிறுவன கடன்தாரரின் திவால் ஆரம்ப தேதி	உத்தரவு நாள்: 28.09.2026 (06.10.2026 அன்று பெறப்பட்டது) NCLT-ன்படி (நீதிமன்றம்-II) சென்னை
7.	திவால் தீர்மான நடவடிக்கை முடிவுறும் என கணிக்கப்பட்ட தேதி	04.04.2027
8.	கலைப்பாளராக செயல்படும் இடைக்கால திவால் தீர்வு வல்லுநரின் பெயர் மற்றும் பதிவு எண்.	திரு. R. வெங்கடகிருஷ்ணன் **பதிவு எண்.:** IBBI/IPA-001/IP-P00115/2017-18/10250
9.	வாரியத்தில் பதிவு செய்யப்பட்ட இடைக்கால திவால் தீர்வு வல்லூநர் முகவரி மற்றும் மின்னஞ்சல்	ராஜ்பாரிஸ் திரிமேனி டவர்ஸ், முதல் தளம், 147, G N செட்டி சாலை, சென்னை - 600 017. **Mail:** rvk@rvkassociates.com
10.	இடைக்கால திவால் தீர்வு வல்லூநரின் தொடர்புக்கு பயன்படுத்த வேண்டிய முகவரி மற்றும் மின்னஞ்சல்	ராஜ்பாரிஸ் திரிமேனி டவர்ஸ் முதல் தளம், 147, G N செட்டி சாலை, சென்னை - 600 017. **Mail:** radarventurespvtltd.cirp@gmail.com
11.	உரிமைகளை சமர்ப்பிக்க கடைசி தேதி	20.10.2026
12.	இடைக்கால திவால் தீர்வு வல்லுநரால், கடன் வழங்குநர்களின் வகுப்பு, பிரிவு 21-ன் துணை-பிரிவு 6A)-ன் உட்பிரிவு (b)-ன்கீழ், ஏதேனும் இருப்பின்	இந்த நிலையில் இல்லை
13.	வகுப்பின் கடன் வழங்குநர்களின் அங்கீகரிக்கப்பட்டபிரதிநியாக செயல்பட அடையாளம் காணப்பட்ட திவால் தீர்வு வல்லுநர் பெயர்கள் (ஒவ்வொரு வகுப்பிற்கும் மூன்று பெயர்கள்)	இந்த நிலையில் இல்லை
14.	(a) தொடர்புடைய படிவம் மற்றும் (b) அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிகளின் விபரங்கள் :	(A) CIRP உரிமை கோரல் பார்ப்பதற்கான இணைப்பு https://ibbi.gov.in//en/home/downloads (B) இல்லை

தேசிய கம்பெனி சட்டம் தீர்ப்பாயம், சென்னை பெஞ்ச், உத்தரவின்படி M/s. ரேடார் வென்ச்சர்ஸ் பிரைவேட் லிமிடெட்-ன் நிறுவன திவால் தீர்வு செயல்முறைகள் **28.09.2026** (06.10.2026 அன்று பெறப்பட்டது) ஆரம்பிக்க உத்தரவு அளித்தது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

M/s. ரேடார் வென்ச்சர்ஸ் பிரைவேட் லிமிடெட்-க்கு கடன் வழங்கியவர்கள் தங்களது உரிமை கோரல்களுக்கான ஆதாரங்களை **20.10.2026** அன்று அல்லது அதற்கு முன்பாக வ.எண்.10-ல் குறிப்பிட்டுள்ள இடைக்கால தீர்மான வல்லூநர் முகவரியில் சமர்ப்பிக்குமாறு இதன் மூலம் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

நிதி கடன் வழங்கியவர்கள் தங்களது உரிமை கோரிக்கைக்கான ஆதாரங்களை மின்னணு மூலமாக மட்டுமே சமர்ப்பிக்க வேண்டும். அனைத்து பிற பங்குதாரர்கள் தங்களது உரிமை கோரலுக்கான ஆதாரங்களை நேரிலோ, அஞ்சல் வழியாகவோ அல்லது மின்னனு வழியாகவோ சமர்ப்பிக்கலாம்.

உரிமை பெற தவறான அல்லது தவறான ஆதாரங்களை சமர்ப்பித்தால் அபராதம் விதிக்கப்படும்.

Sd/-
R. வெங்கடகிருஷ்ணன்
இடைக்கால தீர்மான வல்லூநர்
M/s ரேடார் வென்ச்சர்ஸ் பிரைவேட் லிமிடெட்
IBBI/IPA-001/IP-P00115/2017-18/10250

நாள் : 08.10.2026
இடம் : சென்னை

Central Bank of India
सेन्ट्रल बैंक ऑफ़ इंडिया
சென்ட்ரல் பாங்க் ஆஃப் இந்தியா
1911 से आपके लिए “केंद्रित” “CENTRAL” TO YOU SINCE 1911

தியாகராய நகர் கிளை
எண்.11, ராஜாபாதர் தெரு, தியாகராய நகர்,
சென்னை - 600 017 Ph: 044 - 2346 4293, 294,
Mail Id : bmchen0883@centralbank.bank.in

SARFAESI சட்டம் 2002-ன் கீழ் இ-ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகாப்பு நடைமுறை விதிகள் 2002 விதி எண்.8(6) / 9(1)-ன் கீழ் அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்களை விற்பனை செய்தல்.

சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா-ல் அடமானத்தில் வைக்கப்பட்டுள்ள கீழ்கண்ட சொத்துக்களை சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியாவின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் **நேரடியான சுவாதீனத்தில் (Physical Possession)** எடுக்கப்பட்டு அந்த சொத்துக்கள் **“உள்ள இடத்தில் உள்ளவாறு”, “உள்ளது உள்ளவாறு” மற்றும் “எந்த நிலையில் உள்ளதோ அந்த நிலையிலேயே”** என்ற அடிப்படையில் கடன்தாரர்/ அடமானதாரரிடமிருந்து கடன் தொகை மற்றும் வட்டி, இதர செலவுகளை சேர்த்து வசூலிப்பதற்காக **https://baanknet.com** என்ற இணையதளம் வழியாக **விற்பனை செய்யப்படும்** என இதன் மூலம் பொதுமக்களுக்கும் மற்றும் குறிப்பாக கடன்தாரர்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

வ. எண்.1 **கடன்தாரர்: Mrs.தெய்வசிகாமணி மாசிலாமணி,** W/o.Mr.தெய்வசிகாமணி **சக-கடன்தாரர்: Mr.ஜோதிவேல் தெய்வசிகாமணி, இருவரது முகவரி,** எண்.9, கமலா ரைஸ் மில் முதல் சந்து, புதுப்பாளையம், கோபிச்செட்டிப்பாளையம், ஈரோடு-638476

கோரிக்கை அறிவிப்பு தேதி: 22.04.2026 / கடன் நிலுவைத்தொகை: **22.04.2026** அன்றுள்ளபடி ₹ **1,39,45,367.63** (ரூபாய் ஒரு கோடியே முப்பத்து ஒன்பது லட்சத்து நாற்பத்து ஐந்தாயிரத்து முன்னூற்று அறுபத்து ஏழு மற்றும் பைசா அறுபத்து மூன்று மட்டும்) வட்டி, கட்டணங்கள்; **சுவாதீனம் அறிவிப்பு தேதி: 30.06.2026**

அடமானத்தில் உள்ள சொத்துக்கள் விவரம்

ஷெட்யூல் A: (மொத்த நிலம்): பழைய சர்வே எண்.27/10, பட்டா எண்.12604 படி, புதிய சர்வே எண்.27/10B, **“காமராஜர் நகர்” என பெயரிடப்பட்ட குடியிருப்பு லேஅவுட், புத்தாகரம் கிராமம், முன்னர் அம்பத்தூர் தாலுகா, திருவள்ளூர் மாவட்டம் தற்போது மாதவரம் தாலுகா, சென்னை மாவட்டம்** என்னும் முகவரியில் **மனை எண்.38-ன் பரப்பு 2643 சதுர அடி மற்றும் இதன் பாகம் பிரிக்கப்பட்ட மனை எண்.38-ன் (தெற்கு பகுதியின் பரப்பு 1330 சதுர அடி) மற்றும் மனை எண்.38-ன் (வடக்கு பகுதியின் பரப்பு 1313 சதுர அடி) நிலம்,** அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். மனை எண்.38 (தெற்கு பகுதியின் பரப்பு 1330 சதுர அடி)-ன் எல்லைகள் & அளவுகள்: வடக்கு: மனை எண்.38 (வடக்கு பக்க பகுதி) - 58.9 அடி, தெற்கு: காலி நிலம் - 59.6 அடி, கிழக்கு: 20 அடி அகல ரோடு - 22.6 அடி, மேற்கு: காலி நிலம் - 22.6 அடி. மனை எண்.38 (வடக்கு பகுதியின் பரப்பு 1313 சதுர அடி)-ன் எல்லைகள் & அளவுகள்: வடக்கு: மனை எண்.39 - 58 அடி, தெற்கு: மனை எண்.38 (தெற்கு பக்க பகுதி) - 58.9 அடி, கிழக்கு: 20 அடி அகல ரோடு - 22.6 அடி, மேற்கு: காலி நிலம் - 22.6 அடி ஆகமொத்த பரப்பு 2643 சதுர அடி நிலம்.

ஷெட்யூல் B: ஐட்டம் எண்.1: ஷெட்யூல் A நிலத்தில் **“பல்லவா அப்பார்ட்மெண்ட்” என பெயரிடப்பட்ட அப்பார்ட்மெண்ட் கட்டிடம், முதல் தளம் ப்ளாட் எண்.F-2-ன் பரப்பு 998 சதுர அடி குடியிருப்பு ப்ளாட், அதனுடன் பொது இடம் உட்பட,** அதனுடன் ஸ்டில்ட் தளத்தில் F-2 என குறிக்கப்பட்ட ஒதுக்கப்பட்ட கார் பார்க்கிங், மேற்குறிப்பிட்டுள்ள ஷெட்யூல் A-ன் மொத்தமுள்ள 2643 சதுர அடி நிலத்தில் **361.78 சதுர அடி பிரிக்கப்படாத பங்கு நிலம்,** அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும்.

ஐட்டம் எண்.2: ஷெட்யூல் A நிலத்தில் **“பல்லவா அப்பார்ட்மெண்ட்” என பெயரிடப்பட்ட அப்பார்ட்மெண்ட் கட்டிடம், இரண்டாவது தளம் ப்ளாட் எண்.S-2-ன் பரப்பு 998 சதுர அடி குடியிருப்பு ப்ளாட், அதனுடன் பொது இடம் உட்பட,** அதனுடன் ஸ்டில்ட் தளத்தில் S-2 என குறிக்கப்பட்ட ஒதுக்கப்பட்ட கார் பார்க்கிங், மேற்குறிப்பிட்டுள்ள ஷெட்யூல் A-ன் மொத்தமுள்ள 2643 சதுர அடி நிலத்தில் **393.87 சதுர அடி பிரிக்கப்படாத பங்கு நிலம்,** அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும்.

குறைந்தபட்ச கேட்பு விலை	டேவணித்தொகை	ஏல உயர்வு தொகை
₹ 65,00,000/-	₹ 6,50,000/-	₹ 20,000/-

வ. எண்.2 **கடன்தாரர்: Mr.சுரேஷ் கணபதி,** S/o கணபதி **ஜாமீன்தாரர்: Mr.மோகன் ராஜன்,** S/o.Mr.ராஜன், **இருவரது முகவரி,** எண்.27, S-2, 2வது தளம். 4வது குறுக்கு தெரு, அமுதம் நகர், முடிச்சூர், சென்னை-600048

கோரிக்கை அறிவிப்பு தேதி: 30.10.2023 / கடன் நிலுவைத்தொகை: **30.10.2023** அன்றுள்ளபடி ₹ **73,54,958/-** (ரூபாய் எழுபத்து மூன்று லட்சத்து ஐம்பத்து நான்காயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பத்து எட்டு மட்டும்) வட்டி, கட்டணங்கள்; **சுவாதீனம் அறிவிப்பு தேதி: 30.01.2024**

அடமானத்தில் உள்ள சொத்து விவரம்

அண்ணா நகர் சார் பதிவு அலுவலகம் எல்லைக்குட்பட்ட, சர்வே எண்.162/3C, TS எண்.30/2, பிளாக் எண்.60, மனை எண்.3 & 4, சப் டிவிஷன் மனை எண்.1 & 2, பழைய கதவு எண்.3, புதிய கதவு எண்.4, **ப்ளாட் எண்.S1, இரண்டாவது தளம், “KSM ட்வின் ஹோம்ஸ்”, பாரதி அவின்யூ, மங்கம்மா நகர், கோயம்பேடு கிராமம், அமிஞ்சிக்கரை தாலுகா, சென்னை-600 107 என்னும் முகவரியிலுள்ள 950 சதுர அடி ப்ளாட், பார்க்கிங் மற்றும் பொது இடம் உட்பட.** மொத்தமுள்ள 3600 சதுர அடி நிலத்தில் 400 சதுர அடி பிரிக்கப்படாத பங்கு நிலம், அதனுடன் இணைந்த துண்டுகளும், பகுதிகளும். எல்லைகள்: வடக்கு: மனை எண்.89 & 90, தெற்கு: 24 அடி ரோடு, கிழக்கு: பிளாக் B (சப் டிவிஷன் மனை எண்.2), மேற்கு: மனை எண்.2.

குறைந்தபட்ச கேட்பு விலை	டேவணித்தொகை	ஏல உயர்வு தொகை
₹ 63,00,000/-	₹ 6,30,000/-	₹ 20,000/-

இ-ஏல தேதி மற்றும் நேரம் **26.10.2026** காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை

EMD சமர்ப்பிக்க கடைசி நாள்/நேரம்: **26.10.2026** மாலை **3.30** மணிக்குள்

சொத்துக்களை பார்வையிடும் தேதி மற்றும் நேரம்
21.10.2026 காலை 10.00 மணி முதல் 4.00 மணி வரை

மேலும் விதிகள் மற்றும் நிபந்தனைகள் விபரத்திற்கு கீழ்கண்ட இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம், இ-ஏல சேவை வழங்குனர் இணையதள முகவரி: https://baanknet.com **(அல்லது)** வங்கியின் இணையதள முகவரி: https://www.centralbankofindia.co.in. சொத்துக்களை பார்வையிட மற்றும் இதர விவரங்களுக்கு, **சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா, தியாகராயநகர் கிளை, சென்னை, அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி - முதன்மை** மேலாளர், **Mob: 99620 22145** அனைத்து வேலை நாட்களிலும் காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை தொடர்பு கொள்ளவும்.

SARFAESI சட்டம், 2002 விதி 8(6)/9(1)-ன் கீழ் 15 நாள் கால அவகாச விற்பனை அறிவிப்பு
மேற்காணும் கடன்தாரர்கள்/அடமானதாரர்களுக்கும் இதன்மூலம் அறிவிப்பதாவது யாதெனில் மேற்காணும் கடன்பாக்கி மற்றும் இதர செலவுகளை இ-ஏலத்தேதிக்கு முன்னர் செலுத்தத் தவறினால் அந்த சொத்து ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டு கடன் பாக்கி வசூலிக்கப்படும். பின்னர் பாக்கி ஏதேனும் இருந்தாலும் வட்டி மற்றும் இதர செலவுகளுக்கும் தங்களிடமிருந்து வசூலிக்கப்படும்.

இடம்: சென்னை
தேதி: 07.10.2026

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
சென்ட்ரல் பாங்க் ஆஃப் இந்தியா